உ

கடவுள்துணை.

நந்திதேவர்

திருவாய்மலர்ந்தருளிய

நந்திநூல்ரோகைசாஸ்திரம்.

௱ய

இஃது.

ம-ா-ள-ஸ்ரீ பழனிஸ்தலம்.

வெ கிருஷ்ணமூர்த்தி ஆசாரியார்

அவர்களால்

பற்பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு

பிழையரப் பரிசோதிப்பித்து

திரிசிரபுரம்

காமாக்ஷீபிள்ளை.

கேட்டுக்கொண்டபடி

திரிசிரபுரம்

புஸ்தகவியாபாரம்

தி, சபாபதிபிள்ளை

யவர்களாற் றமது

ஸ்ரீ மட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

பார்த்திப ௵

அறிக்கை



இதனால் சகலமானவர்களுக்குமறிவிப்ப துயாதெனில்-திருச்சிறுப்பள்ளிபுஸ்தகஷாப்பு தி. சபாபதிபிள்ளை, யவர்களிடத்தில் தமிழ்தெலுங்கு-கிரந்தம்-சித்துபுருஷால் சாஸ்திரம்ஜாவளிதினுசுகளும்விலைசரசமாய்பெற்றுக்கொள்ளப்படும்-அச்சிட்டுமுடிந்தபுஸ்தகங்கள்.

ஞானவாசிஷ்டம்-உரை,

அண்டபிண்டபஞ்சீகரண தெளிவுபடத்துடன் } 1—4—0

சீராளனென்று வழங்குகிற சிறுத்தொண்டநாடகம்


நந்திநூல்-ரோகசாஸ்திரம்

அயிலாண்டாஸ்பரிஜாவளி

இங்ஙனம்,

காமாக்ஷிபிள்ளை

தி. நா. பெரியசாமிபிள்ளை



உ

சிவமயம்

நந்திதேவர் திருவாய்மலர்ந்தருளிய

நந்திநூல் ரேகை சாஸ்திரம்

திரிபுரமெரித்தோன்மைந்தன்றினகரனடியைவாழ்த்தி
மருவியநந்திநூலின்வழமையைபுகழக்கேளீர்
சரிவரமுனிவர்தாமும்சரநூலாகத்தோன்றி
குருவருளாலேதோன்றக்குணமுடன்செப்புவேனே, (க)
செப்புவேன்நடத்தைக்கண்டுதிரமுடன்குறிகளெல்லாம்
கப்பியகரிமுகன்றன்கனமுடனடியைவாழ்த்தி
உறப்பனமாகவேதான்முறையெலாமினியாருய்ந்து
மப்பியகுறிகளெல்லாம்வழமுடனுரைப்பனென்றே (உ)

நூல்

என்னவென்றுலகிலுள்ளோரேவிவரங்கேளிர்
இக்குறிகளறிந்துசொல்வோற்குறுதியாகும்
மன்னவனேவருகுமிடற்அரியமேவண்டி
மானிலத்திலுரைப்பவர்க்குவகுத்துச்சொல்வேன்
இன்னபடிவகைவகையாப்பிரித்துச்சொல்வோம்
இன்னிலத்தில்குறிப்பாரிதாமியம்பலாகும்

சொன்னபடியேஒன்றாய்க்குனித்துப்பாரு
சுத்தமுடனிக்குறிகள்தோற்றும்தோற்றும் (௩)

தோற்றுமடா அக்குறிகள்யுக்தியாலே
சொல்குருவைத்தெய்வமென்றுநினைந்தபேர்க்கு
ஏற்றமில்லைகுறைவுமில்லைவிவறம்தோற்றும்
இக்குறிகள்வெழியாகும்இனிதப்பாது
மாற்றமாய்மேவுகின்றயிடறும்யோகம்
வருமையெனும்செல்வமெனும்வருவதெல்லாம்
சாஸ்த்திரத்தார்குறியறிந்துசொல்வோர்க்காகத்
தரணியுள்ளமானிடற்குசாற்றுவேனே (௪)

தரணியுள்ளமானிடர்க்குசொல்வேன்கேளு
தன்மையுடன்குருபாதம்தஞ்சமென்றே
கரணமுடனிக்குறிகள்தோற்றமாகும்
கசடற்குறிப்பறியாமல்பொய்தாளென்பார்
தீர்க்கமுடன்தெரியாதமூடர்க்கென்றால்
தெரியாதுஇன்னூலில்அவர்க்கியாதே
அரணமுனிவோறுரைத்தநந்திநூலை
ஆராய்ந்துகுறிப்பினிமேல்அறிந்துகொள்ளே (௫)

கேளப்பாமுகக்குறிப்புகருத்திலுள்ள
கிழந்ததொருவரைகளெல்லாம்பிரித்துச்சொல்வேன்
மீளப்பாநூலினிடவிபரமெல்லாம்
விரைந்துசொல்வேன்நன்றாகவிவரங்கேளே
[illegible]ளப்பாஒன்றிரண்டுமூன்றின்மேலே
நன்றாகப்பாருமந்தகுறிகள்காணும்
சூளப்பாஇனிக்குறிகள்விபறம்மெல்லாம்
சொல்லுகிறோம்நன்றாகதுறந்துதானே (௬)

துறந்துதான்சொல்லுகிறேன்விபரமாக
சுழிமாறுமஞ்சுமுதற்பஞ்சரேகை
பணிந்துபலவிதமாகக்காண்பதெல்லால்
பாரிலுள்ளமானிடர்க்குபரிந்துசொல்வேன்
விரைந்துசொல்வேன்நந்திநூல்முறமைதன்னை
விபரமுடன்கேழ்பபதற்குக்குறிப்புகாணும்
சிறைந்ததொருதேகமதில்ரோகைகண்டு
தெளிந்துசொல்வேனக்குறிகளறிந்துகொள்ளே (௭)

வாரென்றநெற்றிதனில் வரைகள்கண்டால்
வண்மையுடன்உட்கழுத்தில் வரையுங்காணும்
பேரென்றஅக்குறிகள் விபரமெல்லாம்
பிரித்தினிமேல்சொல்லுகிறேன் பிரியமாக
பாரென்றுசொல்லுகிறேன் சகத்துநோர்க்கே
பட்சமுடனாராய்ந்து பலன்களெல்லாம்
கூறென்று நூலிகிட விபரந்தன்னைச்
குறிப்பறிந்துரேகைதன்னைக் கூறுவேனே (அ)

நெற்றிரேகை.

மன்னியதோர்நெற்றிதனில் வரைகள்நாலு
வானுலகில்முன்கழுத்தில் வரைமூன்றாகில்
உன்னிதமாம்கணபதிதாள்சிந்துமண்ணில்
உத்தமனேசொல்லுகிறேன்யோகங்கேளீர்
எண்ணியதோர்நாலுபத்து ஐந்துக்குள்ளே
எளிதாகத்தாரம்ரண்டுஇதமாய்தோன்றும்
வன்னியமாம்வனிதைவிந்து வகையதாகி
வானுலகிற்பிதாவுக்கு வியாதியாமே (௯)

ஆமெனவேநெற்றிதனில் வரைகள்மூன்று
அனிமையுடனுட்கழுத்தில் வரைரண்டாகில்
தோமெனவேமுதுகுதனில் வலதுபாகம்
சுத்தமுடன்மறுவொன்று தோன்றுமாகில்
வாமென்றவொருதாரம் வீணாய்ப்போகும்
வண்மையுடன்மறுதாரநிலைக்கும்பாரு
ஆமெனவேயுரைத்தோமூன்றிருபதுக்குள்
அக்குறிகள்இன்னிலத்திலாகுந்தானே. (௰)

தானென்றநெற்றிதனில் வரைகள்ரண்டு
தப்பாமல்இடமதனில் மங்குதோன்றில்
ஊனமென்றேசொல்லுகிறோ மனைவிமக்கள்
ஒறுத்திருப்பாரின்னிலத்தில் ஒருகால்பத்தில்
தானென்றபொருள்தோறறு தரணிதன்னில்
தயவில்லாருகவிகெட்டுத் தானேநிற்பாள்
கானென்றவிக்குறிகள் பொய்தானல்லக்
கண்டுரைத்தோம்நந்திநூல் கருத்தில்கொள்ளே (௰க)

வேறு.

நெற்றியில்வரைகளைந்து நிலைக்குறியதுவேதோன்றில்
மெத்தவேவிசனமுண்டு விரும்பியபொருள்நில்லாது
கைத்தலந்தனிலிருந்த குறிகளேகாணுமாகில்
புத்திரர்இல்லையன்றே புகழ்பெறவுரைத்தார்நந்தி (௰உ)

வண்ணமாய்நெற்றிதன்னில் வரைகளேமூன்றுகண்டால்
இன்னமுங்கழுத்திலந்தஎழில்வரைதோற்றுமாகில்
சொற்னமும்பலவுண்டாகித தோன்றியேமறையும்பாரு
பன்னியபயிர்வேளாண்மை பலித்திடாப்பாதியாமே (௧௩)

மங்கதுபால்போற்றோன்றி மறுவதுவலத்தில்நிற்கத்
தொங்கிய குமிழுமாகிற் சொல்கிறேன்யோகங்கேளு
அங்கொருமூன்றுபத்துஆறெனும்ஆயிசுக்குள்
கங்கையிடர்கள்வந்து கழிந்ததுநிசத்தான்மைந்தா (௧௪)

சீபெருநெற்றிதன்னிற்றெளிந்ததோர்வரைகள்மூன்று
பேர்பெறுகழுத்திற்றானே வரையொன்றுபெரிதாய்த்தோன்றில்
தார்பெறமூன்றுபத்துத் தாணியோராறிற்குள்ளே
கூர்பெறுயோகமெல்லாங் குறித்துநீயுரைக்கக்கேளே (௧௫)

கேளுமைந்தாயிசுக்குள் கெங்கையிடர்கள்தோற்றும்
மீளவேவருகும்யோகம விபரங்கேளினிமேலன்றே
நாளிலேயிடர்களில்லை நலமுடன்பொருளுஞ்சேரும்
மீளவேயதிகயோகம் மிகுதிபெற்றிருப்பானென்றே (௧௬)

கழிந்தபின்னுரைக்கக்கேளு காண் முப்பத்தாயிசுக்குள்
குழந்தைகள்ஐந்துண்டாகும் குணமதாய்ஆண்கள்மூன்றே
தழைந்திடுதலைச்சன்பாலன் தனக்கொருபனிரண்டாண்டில்
விளர்ந்திடும்புவியிற்கீர்த்தி மாமுனிவோர்கள்சொன்னார் (௧௭)

இன்னமேயோகங்கேளீர் இழிவில்லைதுயரமில்லை
பின்னிலேசெல்வமெல்லா பெருகியேதனவானாவான்
இன்னமும்பலன்களெல்லாம் இசைவுடன்சொல்லக்கேளாய்
உன்னிதநந்திநூலின்உண்மையையுணர்ந்துபாரே (௧௮)

மன்னியதோர்குமிழ் நீண்டுகூர்மையாக
வானுலகிற்காவியது சிறுத்தபேர்கரு
புண்ணியமாம்வலதுபுரமமச்சங்காணும்
புருவங்களேதுடிக்கும் நாலுபத்தில்
சொர்ணமிகுத்துரைகள்மெச்சச் சுகமாய்வாழ்வான்
சொல்லுகிறேனின்னமொருகுறிப்புக்கேளீர்
வண்ணமதாயவர்குலத்திலரசனென்று
மானுலகிலேயுரைத்தோம்வண்மைதானே (௧௯)

குமிழ்நீண்டுகாவிசிகப்பாகத்தோன்றில்
கோடியெனவுலகுதனில்குறித்துச்சொன்னோம்
தமிழுடையோன்பொருள்பெருத்தோனுலகுதன்னில்
சாந்தமுளபோகனுக்குச்சாந்தனாவான்
குமிழ்பெருத்துக்காவியதுபச்சையாகில்
கோலமுடனவர்களுக்குக்குறியேகேளீர்
அமிழ்ந்தகொருதாரமதுகிணற்றில்வீழும்
அன்புடனேயிருதாரமறிந்துசொல்லே (௨௰

நெற்றியில்வரைகள்மூன்றுநிறங்கருத்ததுபோற்றேன்றில்
முத்தியாமலர்சிறுத்துமூக்கதுநீண்டிருக்கில்
மத்திபவரையிரண்டுமெகிழ்ச்சியாய்நெற்றிமீதில்
அத்தனைத்தோன்றுமாகில்அதன்பலன் அரையக்கேளே (உக)

உரைக்கிறேன்தாரம்ரெண்டேஉதவிசேர்சமர்த்தனுவான்
சிறக்கவேமுப்பத்தொன்றில்தெரிந்துசெல்ஆணுமொன்று
பிறக்குமேகடனுஞ்செல்வம்பூர்த்தியாய்சரிபோல்நிற்கும்
வருத்தமோ அதன்மேலில்லைவடகபடுஞ்சகோதரன்தான் (உஉ)

அஷ்டமிமதியம்போலும் அழகுறுநெற்றியாகில்
இஷ்டமாய்க்காவிதானும் இனித்திடுபசுமையாகில்
பட்டத்துக்குடையோனுவான் பாரினில்ராஜனுவான்
ஒட்டியசேனைக்கெல்லாம் ஒருபடைத்தலைவனுமே (உ௩)

காவுறுமலரைப்போலே காவியிற்றேன்றியின்னம்
தூவியமலரைப்போலேதோன்றிடில்குமிழின்மீதில்
மேவியமச்சமொன்றுவிரைந்திடவலத்திற்றேன்றில்
தாவினிற்பெரியோனென்று தவமுனியோர்கள்சொன்னர் (உச)

வேறு.

இடதுபுறமங்கிருந்து மருவுதோன்றில்
இனிவருமோரூனமெல்லா மியம்பக்கேளு
படிமிசையினெற்றி வரையிரண்டுமூன்றில்
பருத்தவரையாய் பலவுங்கூடிநின்றால்
வடுத்தனுயரினித்தோன்றும் பொருள்நில்லாது
வாழுகின்ற உயிர்மனைவி சேதமாகும்
தொடுத்தவரைநாவிருந்தால் வலத்திலேமங்கேல்
தோற்றுந்துன்பமெலாந் துலையுந்தானே (உ௫)

தெளிந்துசொல்வேனின்னமொரு சேதிகேளு
திறமுடனேயிதழிரண்டு சிறுத்துநிற்கில்
கொழுந்துமலர்போலிருக்குங் காவிதானே
குணமுடனேதிரண்டகண்டக்குறியைக்கேளு
வெளுத்தமுகமாயிருந்து வலத்தில்மச்சம்
விழுந்திருந்தால்யோகமென்ற விப்ரந்தோற்றும்
தனக்கட்குமுதல்வனென்று புகழ்ந்துசொன்னேம்
தாரணியில்ராசனென்று சாற்றலாமே (உ௬)

சாற்றுகிறேனடியிதழும் பெருத்துநீண்டு

தலைகனத்துயிடத்தில்மங்கு தனியாய்த்தோற்றில்
மாற்றமுடன்கடனழுந்தி முப்பதுக்குள்
வாழ்த்துகின்றஆசாமி மாறிப்போவான்
வாய்த்ததுணையொருவரில்லை யொருவன்நிற்பான்
வளம்பெறவேபெண்ணுதவி வருவதுண்டு
கூற்றெனவேயிக்குறிக ளெல்லாந்தோற்றும்
குழந்தைமுதற்பெண்பிறக்கு மென்றுசொல்லே (உஎ)

வேறு.

நெற்றியில்பயறுபோலேநேசமாய்வரைகளைந்து
உத்தமக்கழுத்தில்மூன்று உதவியாய்வரையிருந்து
மத்தத்தில்மாலையாக மணிக்கழுத்ததுபோற்றோன்றில்
வெற்றியாய்வலதுகன்னை மதில்மருகிருந்தாற்கேளே (உஅ)
கேளொறுமூன்றுபத்துக் கிருபையாயைந்துக்குள்ளே
மீளவேபாலன்றானும் விசனமும்அலைச்சல்தோற்றும்
நாளவேமூன்றுபோகம் தாரணியதுமேற்சொன்னோம்
ஆளவேகுறியிதென்று அருமுனியுரைத்தநூலே (உகூ)

வேறு

கூறியதோர்நெற்றிதனில் வரைகள்நாலு
குறித்ததொருவரையிரண்டு துண்டாய்நின்றால்
மீறியதோர்உட்கழுத்தில் வரைகள்மூன்று
வீற்றிருந்தாற்சொல்லுகிறோம் விபரங்கேளீர்
தாரணியிற்பொருள்களில்லை யைந்தில்ரண்டு
தன்பிறப்பிற்றனிருக்குந் தணிவுதானே
ஆறுமைந்துமூன்றுபத்தில் பலன்கள்தோற்றும்
அறிமையந்துஉண்டனவேயறிந்துகொள்ளே (ஙய)
முத்தியுடனெற்றிதனில் வரைகள்மூன்று
முகமலர்ந்துகருத்தில்வரை ரண்டதாகில்
அத்தினையுங்காணுமென்றே குறிகள்சொன்னோம்
அக்குறியைப்பொய்யெனவே கற்றவேண்டாம்
வெற்றிபெறுவிரலடியில் விரைந்துபார்க்கில்
வெண்கவசம்குண்டலம்போலவீற்றிருந்தால்
பத்தியுடன்மூன்றுபத்து ஐந்துக்குள்ளே
பார்மிசையிலேயலைந்து பலனுண்டாமே (ஙக)

சொல்லுவேன்நெற்றிதனிற்றுணைவரைநாலுண்டாகில்
அல்லலரோயுள்கழுத்திலணிவரைவொன்றேயாகில்
தொல்லுலகத்தில்வாழ்வு சொல்லுவேன்யோகங்கேளீர்
கல்வியும்பொருளுமில்லைகடன்மிகவில்லையன்றே (௩௨)

இன்னமொன் றுரைக்கக்கேளும் பெழிலா றுமூன்றுபத்தும்
வன்னமாய்பொருளுமில்லை வாழ்ந்திட அரசுமில்லை
வன்னியவனிதைவொண்டும் வாலுலகத்திலுண்டாம்
சொன்னேநந்தாயிசுக்குள் மணவினையறுலைப்பனென்றே (௩௩)

வேறு.

பொன்னிறமாய்ப்பயறதுபோல் நெற்றிதன்னில்
பூற்றிருக்குவரைநாலில் ஒன்றதுண்டாய்
இன்னமந்தஉளக்கழுத்தில் வரைரண்டாகில்
இசைந்துவரும்யோகமெல்லாம் இயம்பக்கேளீர்
பன்னியதோர்மூன்றுபததில் வாவுசெல்வம்
பகவானென்றே யுரைப்போம் பாயுனுள்ளே
சன்னமாய்வலப்புரத்தில்மச்சந்தோன்றும்
தனக்குமந்தக்குறிகண்டால் சாற்றலாமே (௩௪)

சாற்றலாம்யோகமுண்டு தனங்களுண்டு
சகலவர்க்கும் உபகாரி சாந்தனுவான்
ஊற்றமுண்டாம்பொருளுமுண்டாய்யுகவியொன்று
யுற்றியுண்டு-இமூன்றில்கண்ட யொன்று
மாற்றமில்லாவாழ்ந்திருப்பான் என்பத்தேழு
வயதுக்குள் அதிகமாய்வாழ்வுகொள்வான்
வேற்றவேயிதனையெல்லாமாராய்ந்தேதான்
வேதமுனிதானுரைத்தார் விரும்பக்கொள்ளே (௩௫)

வேறு.

நெற்றியில்வரைகள்ரண்டு நிலைதலைந்ததுபோற்றோன்றில்
மெத்தவேபொருளுமில்லை வினையுடன்பொருளுந்தோற்பார்
சித்தமாய்ரண்டுபத்து மூன்றினிக்குறிகள்தோற்றும்
சாற்றிதுமெய்தானென்று சாற்றினார்முனிவர்தாமே (௩௬)

இத்தநுகுலையாதாகில் இருபத்தைந்தாயிசுக்குள்
தத்துவமொன்றுதோன்றும் தனக்கு மிக்குறிகள்கண்டால்

மூத்தியபொருளுந்தோற்பான் மூன்பிறந்ததுவேயானால்
வெற்றியுமுாகுமென்றுவிளம்பினர்முனிவர்தாமே (௩௭)
நெற்றியில்வரைகள்மூன்று நிலைக்குறித்துண்டாய்நின்றால்
மத்திபம்கழுத்தில்ரெண்டுவரையதுதோன்றுமாகில்
சித்தமாயிடறுதோன்றும் சென்றுசொல்விருபதுக்குள்
மெத்தவும்வருமையோகம்விரைந்துகொள்ளினிமேல்நன்றே (௩௮)
என்றெனஇனிமேலந்த விருபத்தைந்தாயிசுக்குள்
நன்றெனப்பொருள்கள்சேரும் நல்லதோர்வித்தையுண்டாம்
பெண்டிரும்வளமாய்வாழ்வும்பிரியமாயதின்மேலுண்டாம்
சென்றிடுதாரமொன்று சிதறிப்போமென்றுசொல்லே (௩௯)

வேறு-கைவரைகள்விபரம்

செங்கையிலேவரைகளிட யோகங்கேளீர்
சிவந்திருக்குமன்னவரை கொக்கியாக
தங்கியதோர்மேலேறிக் கொடுங்கைபோலே
தன்னருகில்கருத்ததுபோல்வரையொன்றாகில்
அங்கையொருசிறுவிரலில் வரைகள்நாலு
அங்குலத்தில்ரெண்டுவரை யாகிற்கேளு
பங்குவிதமாயிருபத் தைந்துக்குள்ளே
பண்புடனேஇடக்கண்ணும் துடிக்கிற்கேளே (௪0)
இன்னமொருகுறிப்புண்டு சொல்வேன்கேளு
இடதுகணேபடபடெனத் துடித்துநிற்கும்
சின்மயமாய்வலத்தில்மச்சந் தானேயொன்று
சிறந்திருக்குமார்பதனிற் றுடையினுள்ளே
மன்னுமிக்குறிகள்யிருந்தாற் சொல்லக்கேளு
வறுமையினுலகத்தைவிட்டு வருஷம்போவான்
முன்னேயொருபெண்பிறந்தே யதுவும்போகும்
முறைமையுடராண்பிக்கும்மொழியக்கேளே (௪௧)
மொழிந்திடுவேனதின்மேலே கடத்தைகேளு
மூன்றுபத்தஞ்சுட்படவே வறுமைதீர்ந்து
பழகிவந்தவினைகளெல்லாம்பறந்துபோகும்
தழைவாயபோவதிகம்நினைத்ததெல்லாந்தரணிமீதே
தனக்குறுதியாகுமென்று தணிந்துசொன்னோம்
உழவெஃவேயுரைத்தோமிக் குறிகள்பார்த்து
உமக்குறுதியாகுமடா வுணர்ந்துகொள்ளே. (௪௨

கைதனிலேயன்னவரை கீழேநோக்கி
கனத்திரண்டுவரையிருந்தாற் யோகம்
உய்யம்பெருவிரலடியிற் புனைந்துநின்றால்
உத்தமனையுறவுசெய்யும் யோகங்கேளீர்
மெய்யுரைத்தோம்பொருளுமில்லைக் கடனுந்தோற்றும்
விசனமதேயடைந்திருப்பான் விளைவுமில்லை
பொய்யெனவேசொல்வதில்லை குறிப்பாய்க்கேளு
பொன்மச்சமிடத்தில்நின்றாற் பிறித்துசொல்லே (சங)

வேறு

பெருவரைகையினுள்ளே பிரயமாய்த்தனித்துப்பார்க்கில்
வருவியமணிக்கைதொட்டு வருவரையாணிற்சேர்ந்தால்
தெருவினில்வந்தரேகை சிறந்தபெண்ணோடுநிற்கில்
வருவதுபோவதுண்டு வான்பொருளதிகயில்லை (சச)
கூடியமணிக்கைதன்னிற் குடியிருந்தெழுந்தாற்போல
நாடியேவருகும்போது நடுவிலொன்றட்டம்வீழ்ந்தால்
தேடியதனங்களெல்லாந்தெருவினிலிறைத்தாற்போல
ஓடியேபோகுமன்றியுயிரும்விட்டகன்றுபோமே (சரு)
மணிதனிலிருந்தரேகை வழிகண்டமனிதர்போலே
துணைகொண்டுவருவானாகிற் சொல்லுறேன்யோகங்கேளீர்
இணைகொண்டபெண்ணின்மீதி லேறியோதாண்டிநின்றால்
தனமதுசேருமைம்பத்துநான்கினிற்றனக்குத்தானே (சசா)

வேறு.

வரையென்றேயறிவதற்குப் பொருளைக்கேளு
வானகத்தில்மீனவரை தான்சுன்னமாகும்
தெருவில்நின்றநடுவரைதான் பெண்ணதாகும்
தேற்றியதோர்மேல்வரைதான் ஆணதாகும்
குறுவரைகள் ஏதென்றால்விபரங்கேளு
குறுக்கிருந்துஆணில்நின்றால்விடமாம்ரேகை
பெருவிரலடியிலொருகீற்றாய்நின்றால்
பேசியதோரவ்வரைதான் பிழைப்புநீக்கும் (சஎ)
பெண்ணவரையிலிருக்கும் வரையோகங்கேளீர்
பேசியதோர்வடபுரத்திற் குறுகிநின்றால்
பணவரையென்றே யுலகில்யுரைக்கலாகும்
வரிசையுடனேரவரையி நடுவரையுமென்றும்
தென்புறத்திற்குறுகியது சாய்ந்துநின்றால்
செல்வரையிதுவெனவே திறமாய்ச்சொல்லும்

துன்பின்வரையன்னமிதிற் குறுகிநிற்கில்
அவ்வறையேபஞ்சையெனவறிந்துகொள்ளே (௪அ)

மத்தகத்திற்குட்படவே யாணின்பக்கம்
வாழ்வரனாயின்விபரமெல்லாம் வகையாய்ச்சொல்லேன்
மூத்திபெருமாண்பெண்ணில் நடுவாய்நிற்கும
மோகனமாவனையெனவே மூனிந்துசொல்லும்
பத்திபெறுவித்தைவனையேதோவென்னில்
பரிந்தஅன்னம்பெண்நடுவேபரிந்துபாரு
வெற்றிபெறவொண்டுவனை சேர்ந்துநிற்கும்
வித்தைவனையென்றுசொல்லி விரைந்துபாரோ (௪௯)

தனவனையும்பெண்வனையுந்தயங்கிநின்றால்
தருணனுக்குப்பொருள்வரவும் போவதுண்டு
தனவனையும்பெண்தாட்டி யன்னம்பார்க்கில்
தரணிதனிலேயுனக்குந் தனங்கள்சேரும்
தனவனையும்அன்னவனை கலந்துநின்றால்
தனஞ்சேரும்பொருள்சேரும் தரணிதன்னில்
தனவனையும்இதுவெல்லாந்தாட்டிநின்றால்
அவன்தரணியினையாளவென்றே சாற்றுவோமே (௫௰)

வேறு

நிலைப்பன்னவனையுந்தாண்டிநென்மூக்குப்பருமன்காணில்
புலவனென்றுலகில்சொல்லும் புனிதமாய்ப்பொருளுஞ்சேரும்
பலர்க்குபகாரனுவான்பாரில் நீளங்காணில்
உலகத்தில்ராசனுவான் மூன்றில்நெற்பருமன்காணில் (௫௧)

சொல்லியவனைகள்தாட்டித் தோற்றமாயங்குலத்தில்
யெல்லையில்ஏறிநிற்க இனிவரும்யோகங்கேளீர்
செல்வமும்மிகவுண்டாகித் திரவியத்துடனேவாழ்வான்
மெள்ளவேமொழிகவிதாட்டில்வேந்தனென்றுரைக்கலாமே (௫௨)

ஓங்கியநகரந்தன்னில் ஒருமுழிதாண்டிநிற்கில்
நாங்குடன்மேல்முழிக்குள் பற்றியேநிற்குமாகில்
தாங்கியகுழ்விபெண்டீர் தனங்களேஒருத்துநின்று
தோங்கியநாலுபத்திற் சித்தனென்றுரைக்கலாமே (௫௩)

வேறு

மைந்தனுக்குவசனமுண்டுபொருள்மில்லாது
வரும்பூசவரையின்கீழ்க்குறுகினின்றால்
வித்தையுடன்பொருளுண்டாம்புரத்தின்மேர
வீற்றிருந்தால்நல்லதென்றுவிரும்பிக்கொள்ளு
அந்தரத்திற்குறுக்கிருந்தால்யோகனென்று
அறிவுடனேயிக்குறிம்பையறிந்துசொல்லே (௫௪)

வேறு.

ஒவ்வொருவிரலுக்கைவரையிருக்கும் மோங்கியஅங்குல்நாலில்
நவ்வியவரைக்குநாமமேதென்னில் நட்சத்திரமென்றினியிரைத்தோம்
இவ்வுலகத்திற்குறிப்பறிவோர்க்குப் பூட்டினேமிந்தநூல்தன்னில்
ஒவ்வியவரையினுறுதிகளறிந்து உரைத்திடுமுலகத்தார்தமக்கே (௫௫)

வேறு

கொடுங்கையில்வரையிருக்கும்யோகங்கேளீர
கூடியதோரன்னவரையேறின்மேற்கே
வடங்கமில்லாவரையிருந்தால் உதவியென்று
வானுலகிற்கண்டுசொல்லுவழியாப்பார்த்து
துடங்கியதோரன்னமரைக்கீழேதானும்
தோற்றமிகத்தானுரைத்தோந்துணிந்துதானே (௫௬)

வேறு.

கரு மத்திலெழுந்தநாமங்களதன்னைக்
கண்டுகொள் அம்மெனவுரைத்தோம்
சிறுவிரல்தாட்டித் தேங்கியவிரலைத்
தேய்வெனவாய்வெனவுரைத்தோம்
பருவியஆள்காட்டிவிரலதினுலம்
வானெனவுரைத்தனர்முனிவர்
மருவிரலதுவேப்ருதிவியென்
றுரைப்போம்பார்மிசையோர்களுமறிய (௫௭)
அப்பினிற்பிறந்த அடிவரைமேஷம்
அக்குறிபோலினியறிவாய்
இப்படிநாலுவிரலுக்குளடங்கி
யிருக்குமீனிராசியினேர்மை
செப்பியபிரிவு விரல்தனக்குள்ளே
தீர்க்கமாயிருக்கின்றவரைக்கு
ஒப்பியேயுரைத்தோங்குண்டலமெனவே
புகந்துகொளுலகுளோர்தனக்கே (௫௮)

வேறு

வாயுவெனும்நடுவிரலேசோதிபக்கம்
வளமாகும்சலமில்லேதனங்கள்சேரும்
ஆயிசதுதொண்ணூற்றென்றேயோங்கும்
அக்குறிகள்கண்டக்காலறிந்துசொல்லும்
ஓய்வடையும்வறுமையெல்லாநாலுபத்தில்
உயர்மகவுமைந்தெனவேயுகந்துசொல்லே
பேயவிதம்ஆராய்ந்துசொன்னபேர்க்கு
மெய்யாகப்பலிக்குமடாவிரைந்துபாரே (௫௯)

வேறு

அப்பெனும்அங்குலத்தில் அணிவரைமேஷத்தின்கீழ்
ஒப்பியவரையொன்றாகில் உந்தனுக்குதவிகிட்டும்
தப்பிலாரிஷபத்தின்கீழ்த் தங்கியவரையுமாகில்
சற்பனை காலமென்றுதயவுடனுரைத்தநூலே

வேறு

இன்னமொருகுறிப்புண்டுசொல்லக்கேளு
இசைந்தவரைரெண்டுக்குள் நடுவேநிற்கில்
சொன்னதுதான்ரெண்டிலொன்றுதோன்றுமாகில்
சொல்லுகிறேனவர்களுக்குத்தோஷமில்லை
வன்னமதாய்ப்பொருள் சேரும்உள்ளமிக்குள்
வாழ்த்திருப்பாரென்றுமுனிவகுத்துநூலே
மன்னுலகில்வாழ்வார்க்கிக்குறிகள்சொன்னோம்
வகைவகையாயிருக்குறிகள் வகுத்துத்தானே (௬௧)
அறிந்துகொள்ளின்னமொருகுறிப்புச்சொல்வேன்
அளவியுரகங்கடந்துநடுவினிறகில்
தெரிந்துமுன்னேசொன்னதிலேயதிகமாகும்
செல்வமிகுமக்கள்பெண்டீர்திறமாகத்தான்
திருவுலகில்வாழ்ந்திருப்பானூறாண்டுக்குள்
திரவியத்தின்மேற்படுவான்செல்வனுமான்
மருவியதோர்மங்கைசுகமனுபோகித்து
வாழ்ந்திருப்பானினியெனவேவகுத்துச்சொல்லே (௬௨)
செல்வப்பேர்மிகுதியுண்டாமனுசந்தாண்டி
திறமானவரையொன்றுகுறுக்கில்நிற்கில்
கல்விபொருள்மக்கள்பெண்டீர்கனமாயுண்டு
கனகமணிச்சிவிகைவருங்கண்டுகொள்வாய்

சொல்விளைசயேயுலகமதில் யோகவானாய்
துரைகள்மிக்மெச்சிடவே அரசுமாள்வான்
தலமதனிற்றண்டிகையேதானுண்டாகும்
சகலருக்கும்பதியெனவேசாற்றலாமே (௬௩)
மூன்கையில்வரைரண்டுசரியாய்நின்று
முன்னிருக்குமிருவரையும்புனேநதுநிற்கில்
தங்கியதோர்நாலுமொன்றாய்த்தயங்கிநின்றால்
தானொருவனேயரசுக்கதிகனாவான்
பெண்கள்ரண்டுடன்பிறப்புமுண்டாய்நிற்கும்
பேசியதோர்பன்னிரண்டில்யோகமாகும்
இங்கிதமாயின்னுமுளபலன்களெல்லாம
இசைவுடனேசொல்லுகிறோமிருந்துகேளே (௬௪)
கூறியமணிக்கைதன்னில் குணவரையொன்றதாகில்
தாரணிதன்னிலுள்ளோர் தனக்கெளியவனேயாகும்
வீரியவரைரெண்டாகில் விசனமும்பொருளுமுண்டாம்
நேருளவரைமூன்றாகில் நிலைத்திடும்யோகங்கேளீர் (௬௫)
யோகமாய்ப்பொருளுஞ்சேரும் உதவிகள்தானுமுண்டாம்
தேகமும்வாடாதென்று திருவுலகத்திறசொன்னோம்
ஆகமாமணியும்போகும் அரும்பொருள்மிகவுண்டாகும்
ஆகுமென்றுரைத்திட்டோமே ஆறஞ்சுபத்தினுள்ளே (௬௬)
மூன்றுதான்வரையாய்நெற்றி முழுத்திருரெண்டதாகில்
பூண்டிடுந்தாரம்ரெண்டு புத்திரர்முன்பிற்றோன்றும்
வேண்டியநாலுபத்தில் விசனமேமிகுதியுண்டாம்
ஆண்டுடனிதனின்மேலே யாணதாற்பொருளுண்டாமே (௬௭)
பிறிதியெனுமேல் முழிக்குள்வரைகள்பார்த்து
பிள்ளைவரையதுவென்றுபிரித்துச்சொல்லு
குறையில்லாவரையிருந்தாற்குணிததுப்பார்த்து
குழவியது குறிகண்டுகுணமாய்க்கூறு
கறியெனவேயவ்வரையிற்காணும்போது
கைநழுவிப்போச்சுதென்றுகருதிச்சொல்லு
வரையதுவேபளபளெனச்சிவந்துதோன்றில்
வந்தபிள்ளையதுவெனவேவகுத்துச்சொல்லே (௬௮)
மத்தகத்திலிருக்கும்வரைகுழவியாகும்
வடுப்படாதேயிருந்தால்வகுத்துச்சொல்லு

அத்தமில்லாச்சரியாகவிருந்தாற்சொல்லு
அறங்குறைந்துநின்றுக்காலமலைக்கவேண்டாம்
இத்ததியிற்பளபளெனவரைகள்கண்டால்
இயம்பிடுவாயிருக்காதுகுழலியென்றே
உத்தியினாற்றுனறிந்துகுறிகள்சொன்னு
லுமக்குறுதியாகுமென்றுஉரைத்திட்டோமே (௬௯)
பெருவிரல்முழியின்மேலே பிரியமாம்க்குறித்துப்பார்த்தால்
குறையில்லாவரையிருந்தார் கூறுவீர்குணமேகண்டு
சிறியதோர்வரையுமங்கே சிவந்தினியிருக்கும்போது
வறியமேபிரிந்ததென்று வகையினியறிந்துசொல்லே (௭0)
சொல்லுவேன்கேளுமின்னம் துணிகருப்பதுபோற்றோன்றில்
அல்லையிற்றடையுண்டென்று யினக்குறிப்பதுதேதோற்றும்
தொல்லையிற்புனைந்துநின்றுற் றணிவதுமாகுமென்று
நில்லுநீயறிந்துபார்த்து நிலைக்குறிப்பதுமேற்சொல்லே (௭௧)
ஐவிரலதுபோற்றோன்றில் அங்குலமதனிலெல்லாம்
செய்விரல்தன்னிலெல்லாந் தெளிந்துநீபார்க்கவேண்டாம்
எப்பெருவிரலிலொன்றை இசைந்துநீகுறித்துப்பார்க்கில்
பொய்யுரைத்திடவுமில்லை பூட்டினூர்முனிவர்தாமே (௭௨)
முனிவர்களுரைத்தநூலை மூவுலகறியச்சொன்னேன்
தனிவுடன்வரைகள்பார்த்துகருத்தறிந்துரைப்பவர்க்கு
நிலைவிலேவெளிச்சங்காணும் நீடியகுறிப்புங்காணும்
மனதிலேவரையாராய்ந்து மகிழ்ந்துநீயுரைத்திடாயே (௭௩)

வேறு

ஆண்வரையும்பெண்வரையும்அன்னந்தானும்
அதுமூன்றிசரிபோகஇருக்குமாகில்
தானலைந்துதான்பிழைப்பான்சிறிதுநாளில்
தனக்குறையாதிருக்குமங்கேபொருளுஞ்சேரும்
ஊண்குறைந்தாலன்னமதுகுறைந்துநிற்கும்
உத்தமனேதனந்குறைந்தால்பெண்குறைந்துநிற்கும்
அறைகுறைந்தாற்றனுகருமொருசலிப்புக்காணும்
ஆண்குறைந்துமயங்கிடவேவேண்டாமப்பா
மார்க்கமுடனுரைத்திட்டமகிமைதானே (௭௪)
கரமதுநீட்டிப்பார்க்கக் கையினில்விரல்களெல்லாம்
சரிவரஇடைவிடாமற் சார்ந்தினியிருக்குமாகில்

பொருளுண்டுவறுமையில்லைப் புகழ்ந்துதானிடைவிட்டாக்கால்
வரவரச்சில்வாமென்றுவாழ்முனியுரைத்திட்டாரே (௭௫)

கையினில்வரைகளெல்லாங்கருத்திடத்தோன்றுமாகில்
மெய்யுளேபலவிசாரம்வேண்டியபலனுந்தோற்றும்
செய்யவேவரைகளெல்லாஞ்சிவந்திடவுறுதிதோற்றும்
பையவேவருகும்யோகம்பண்ணவருரைத்ததாலே (௭௬)

நெய்திறம்போலேயந்தநீள்வரைகிளைமாகில்
பையவேகடனுஞ்செல்வம்படர்ந்தொருவழியாய்த்தோற்றும்
உய்யவேமாணிறம்போலுறுதியாய்த்தோன்றுமாகில்
செய்மூன்றுபத்திறுவிடர்வருமென்றுகொள்ளே (௭௭)

வேறு

அச்சமரமாயன்னவரைக்குள்ளேயேனும்
ஆண்வருரைக்கும்பெண்வரைக்குநடுவுமாகில்
வச்சதொருசவுக்கமதாய்வரையொன்றாகில்
வானுலகிற்கணகபதியோகமாகும்
எச்சியதாய்வாழ்வர்யோகஞ்சேரும்
இசைத்தவரைமூர்த்தியெனவியம்பவாகும்
எச்சமிலாவாழ்வடைவார்இருபத்தைந்தில்
இயல்பெருகுமுத்யோகமாகுந்தானே (௭அ)

அன்னவரைமேலேறிலதிகஞ்செல்வம்
ஆறைந்துக்குட்படவெயதிகமாகும்
அன்னவரைகீழ்நோக்கில்வறுமைகாணும்
ஐம்பதிலேபொருளிதிலையலைச்சல்காணும்
அன்னவரையிரைகள்விட்டால்யோகம்கேளீர்
ஆகரவாய்ஒருவிதமாய்வாழ்வர்கண்டீர்
அன்னவகைதன்னிலுறுபலன்களெல்லாம்
ஆதரவாயிருந்துநீஅறைகுவாயே (௭௯)

௩

கைவிரலைந்துதன்னைக்கலந்துதானநந்திநூலை
செய்யவேமுழங்கைகொட்டித்தெரிந்ததைநீட்டிப்பார்த்தால்
ஐவரைதாட்டிநிற்கில்அருமைசேர்யோகங்கேளீர்
வையகம்நூருகாலம்வாழ்குவன்சிவிகையேறி (௮௰)

அப்படிவரைகள்தாட்டிஅணிவரைகடந்துநின்றால்
செப்பலாமனைவிமக்கள்திரவியத்துடனேவாழ்வான்
ஒப்பமாயினங்கள்சேரும்உதவிகள்மிகவுண்டாகும்
தப்பிலாக்குறிகள்கண்டாற்றரணியில்வேந்தனாமே (௮௧)

அணிவரைதன்னில்நிற்கில்அக்குறியுரைக்கக்கேளீர்
துணைவரும்யோகஞ்செல்வந்தோன்றிடுந்தொழிலுநன்றாம்
அணிபலசனங்கள்கூடும்ஆயசுநாலுபத்துள்
மணியமாம்யோகமென்றுவாழ்முனியுரைத்தநூலே (௮௨)

நூலெனயுரைத்ததாலேநூதனமறியாமூடர்
சாலவேகுறிப்புக்காணார்தட்டழிந்திடுவார்மெத்த
கோலமாய்க்குறிப்புக்கண்டாற்குருவருளாலேமேவி
யோலமாயுறுதியென்றுஉரைத்தனர்முனிவர்தாமே (௮௩)

கூறியதோரிருவரைமேலிருக்கும்போது
குறிப்பதுவுஞ்சொல்லுகிறேன்கூர்ந்துகேளு
மீறியதோர்மனைவிமக்கள்பொருளுண்டாகும்
மிகுதிபெறவாழ்ந்திருப்பார்வினையுமில்லை
யோரிரண்டுபத்தஞ்சிற்றனமூஞ்சேரும்
உத்தமனேயுனக்கதிகமாகுஞ்சொன்னேன்
தாரணியிலிக்குறிகள்தப்பாதென்று
தவமுனிவரறிந்துரைத்தார்சரநூலாமே (௮௪)

அம்மொழியிலடிவரையிலிருக்கும்போது
அருமையுடன்மேவுகின்றயோகங்கேளீர்
உம்மனையிற்றுயரமுண்டுசெல்வமுண்டாம்
உத்தமனேபக்குறிப்புக்கடனுஞ்செல்வம்

செம்மையுடனவ்விரண்டுப் சரியாய்நிற்கும்
தெரிந்துசொல்வோமிக்குறிகள்பொய்யேயல்ல
வண்மையுடனவ்வரைக்குளடங்கிநின்றால்
வறுமையதுதோன்றுமிதுவழுத்தினேமே (அரு)

வாழ்த்தினேம்அடிமுழியிலிருக்தோற்கள்நல்லன்
வறுமையினாவினைகளுக்குப்பாவியாவன்
தூற்றுவார்பஞ்சையென வுலகந்தோர்கள்
துணிந்துகுறியறிந்துசொல்லுந்தப்பாதென்று
சூற்றமுடனிக்குறிகளறிந்துதானே
யியம்புவீர்மனந்தனிலேபயமும்வேண்டாம்
ஆற்றுநீரோடலென அலைவான்சித்தன்
அப்புறமேமேற்குறிகளறிந்துசொல்லே (அசு)

வேறு

தேடியவரைகள்ளுன்றில்சேர்ந்திடுங்கயிறுமாகில்
கூடியமனைவிமக்கள் குறைந்திருபபவனேயாகும்
நாடதிலொருவனாக நல்கியேமுட்டியேந்தி
வீடுகள்தோறும்பிச்சை வேண்டியுண்டிறந்துபோவான் (அஎ)

முடியினிற்கயிறுமேறமொழிகிறேன்சொண்டுபத்தில்
திடமுடனூர்விட்டேகி மென்றுரைத்திடுவார்சித்தம்
படிமிசைதன்னின்செல்வம் பத்தினிற்றுதைபோவான்
முடிவதுநிசந்தானென்று வாழ்முனியுரைத்தநூலே (அஅ)

இன்னமொருகுறியுண்டுசொல்லக்கேளு
இட்டவிரலைந்துதனைவளையக்கொண்டு
சொன்னபடியெக்நூலைவளைத்துக்கொண்டு
சுற்றிடவேமணிக்கையில்சரியாய்நிற்கில்
மன்னவனேதனக்குவரும்யோகஞ்சேனீர்
வாழ்வுமிரும்பொருளுண்டுபலனுமுண்டாம்
மன்னவரோநூல்குறைந்தாற் பொருணில்லாது
வறுமையதுபற்றுமென்றுவாழ்த்தினோரே (அகூ)

பெருவிரல்வளையங்கொண்டுபிரியமாயளந்தநூலை
இருகயிறுயங்குலத்திலிசைத்ததை யளந்துபார்க்கில்
மருவியமுப்பதுக்குள் வயதினிப்பார்ப்போமென்றால்
ஓருவிரற்கிரண்டுகொண்ணு மோதகமறையுந்தானே (௧௰)

வயது

அந்தவகைக்கயிறளந்துமுப்பதுக்குமேல்
ஆயுளினிப்பார்ப்போமென்றாலருமைகேளே
சிந்தைதனில்நினைந்துசொல்லும்விறலுக்குள்ளே
தெரியவுறுமாயமொன்றுசெப்புவாயே
விந்தைபெறஅந்நூலை முன்கைதொட்டு
விரல்நீட்டஅடிமுழியிலிருபதாகும்
முந்திவருமேல்முழி மேலேம்பதென்று
முகமறிந்துநந்திநூல் முனிந்துசொல்லே (௧௧)

வேறு

பத்தினியாயசுக்குள்பார்மிசைவயதுபார்க்கில்
மெத்தவும்எண்ணவேண்டாம்விரலுக்கொன்றரையேயாகும்
சித்தமாயக்குனிந்துபார்த்துத் தெளிந்துநீசொல்லும்போது
கைத்தலந்தன்னிலெல்லாங் காணுமென்றுரைத்தார்மின்னோர் (௧௨)
இப்படிக்குறிகள்சொன்னோம் இனியதையூரிலுள்ளோர்
செப்பமாய்க்குறித்துப்பார்த்துத் தெரிகுவார்குறிகளெல்லாம்
கப்பியகுருவின்வாக்குக்கருத்தினில்மறந்திடாமல்
அப்படியறிந்தபேர்க்கு அக்குறிகாணுமென்றே (௧௩)

வேறு

ஒருநூலைக்கழுத்ததனிலமாலையாக
உண்மையுடன்மார்முனைமேல்வைத்துநீட்டி
சிரசதிலேசுற்றிடவே சரியாய்நிற்கில்
தேறியவன்பெண்ணுறவு வில்லைசொன்னேன்
மருவியதோர்க்கயிறதுவேமீறிநிற்கில்
மங்கையுறவுண்டெனவேவகுத்துச்சொல்லு
தெருவிலவன்திரிவதில்லை யோர்காலத்தும்
செப்புவீரிக்குறிகள்செப்புவீரே (௧௪)

வேறு

நடைக்கண்ணேடளந்தநூலைக்கருத்தினில்நிறுத்திக்கொண்டு
நடைக்கையில்வளையங்கொண்டு கயிறுதான்கூடச்சேர்த்து

இடக்கையால்முளங்கைதொட்டு நீட்டியேபார்க்கும்போது
படர்க்கையாய்மூழியின்மேலே பற்றியேநின்றல்நன்றே (௬௫)

வேறு

தோளொடுநடுவிரல்தொட்டதைரெட்டித்து
நீளமதாக்கிநெற்றிநீண்டிடில்
காலைதன்னுயிரொடு கன்றுஞ்செய்யவாய்
கோளறும்பிருதிமாய்க்குலவுஞ்செல்வமே (௬௬)

வேறு

முன்னியநெற்றிதன்னில்வயது தொண்ணூறேசொல்லும்
என்னிருபுருவநின்றல்எண்பதென்றுரைக்கலாகும்
பின்னியமூக்கில்நின்றல் பேசுனேமெழுபதேழு
பன்னமாயறுபத்தைந்து வருமோவாயறுபதாமே (௬௭)

அக்குறிகழுத்தில்வந் தணுகிநின்றிடில்
துக்கமும்ஆயசோசுறுங்குமன்பதே
மிக்கவுநெஞ்சுறில் விளங்குமுப்பதே
பக்கமாய்மார்பினிற்பகருமிருபதே (௬௮)

வேறு

மானிடற்குநடக்குமந்த யோகமெல்லாம்
வாழ்த்தினேமிக்குறிகள் சரநூலாலே
தானடந்து உலகிலுள்ளோர்கண்டுசொல்ல
தன்மையுடனுரைத்துவிட்டோவிபரமாக
கூனருக்குங்குருடருக்குங்கிட்டாதென்று
குறிப்பறிந்துசொல்லிவிட்டோமதிதப்பாமல்
ஞானிலத்திற்குணக்குறிகள் சொல்வார்தம்மை
நாடலாம்குருவெனவேதேடலாமே (௬௯)

தாடையில்சுழியொன்றுகில்
தரணியில்வேந்தனவான்

நாடையில்சுழிரொண்டாகில்
நானதிகாரனுவான்
நாடையிற்சுழிமூன்றாகிற்
றனக்கொருமூன்றுபத்தில்
நிட்டியயோகியென்று
நிலைக்குறியுரைத்திட்டோமே (௱)

நெற்றியில்வலதுபாகம்வலங்கரிசுழியேயாகில்
சித்தமாரிலகுதன்னில் செங்கோலுகக்குடையனுவான்
உத்தமர்க்கிடதுபாகம் உகந்திடப்புரியதாகில்
நித்தியானந்தயோகம்நிலைக்குமொன்றுரைத்திட்டோமே. (௱க)

வலத்தினில்தோளினுள்ளே வலம்புரிசுழியொன்றாகில்
தலத்தினிற்பெரியோனுவான் தனக்கினியபொருளுஞ்சேரும்
குலத்தையுத்தரிக்கநல்ல கூர்மனத்திடவானுவான்
கலக்கமும்இடரும்வந்து கலங்கிடாதென்றுசொல்லே (௱உ)

மார்பிடைவலதுபாகம் வலம்புரிச்சுழியேயாகில்
விரியகொடுங்கைதொட்டு விளங்கியபாதமட்டும்
சீர்பெறுவலத்திற்றானே தெரிந்திட்ட்சுழியுமாகில்
கூறியசுழிகள்நன்று கூறுவோமின்னங்கேளே (௱ங)

தனக்கொருஉள்ளங்காலில் வலம்புரிச்சுழியுமாகில்
சினத்துடன்மூன்றுபத்தில் தேசம்போயேறிநிற்பான்
இனத்தவிக்குறிகளெல்லாம்இடம்புரியாகநின்றால்
மனத்தினில்விசனமென்று வாழ்முனியுரைத்தநூலே (௱ச)

இப்படியிடதுபாகம்இடம்புரியிருந்தாற்சொல்வேன்
தப்பிலாப்பலன்கள்காணும் தரணியிற்பழுதுமில்லை
செப்பியவலதுகூறுய்த் தெளிந்திடவறுமையாகும்
தப்பிதமில்லையிந்தச் சாஸ்திரஞ்சார்ந்துபாரே (௱ரு)

கொடுங்கையில்ரொண்டிலேதான் குணமுடன்சுழியிருந்தால்
நடுக்கிய திருடனென்று நாலஞ்சுள்கட்டுளாவல்
அடங்கியஇடதுசுற்றாகிற்தோன்றிடுங்குறிதப்பாமல்
மடங்கியவலஞ்சுற்றாகில்வந்திடாதென்றுசொல்லே (௱சு)

காலில்முன்சொன்னப்போலகாட்டியசுழியுமாகில்
சீலமாய்விலங்குவந்து சேர்ந்திடுமென்றுசொல்லு
பாலவலம்புரியதாகிற் பகர்ந்திடவேண்டாம்சொன்னேன்
கோலமாமுனிவர்சொன்னகுறிப்பைநீயறிந்துகொள்ளே (௱எ)

சகோதரத்தில் ஆணும் பெண்ணினாலும்
தன்மையுடன் வருகிறபருவங் தேகந்தன்னில்
சோகமுடனுருமலோந்தியிலவிருமு
சொல்லுகிறேனிக்குறிகளுருதியாகு
அகோரமுடனிகுறிகள் நாலுபத்திம்
ஆகுமெனும்குறிப்பறிந்தாருய்ந்துசொல்வோம்
இகமுண்டாம்தினமேலும்பெரியோனுகின்
தோன்றுமறுபின்பிறந்தபிள்ளையாலே (௩அ)
சொல்லிவந்தஇன்னமொருசெய்திகேளு
சொற்பெரியநூலினுடவிபரம்கேளு
பண்மையாம்பாடிவித்தேன்ஈசனாலே
பார்த்திடவேஇந்நூலுபொய்யாகாதே (௩௯)

நந்திநூல் நூற்றுபத்து
நன்மைசேரிந்நூல்தன்னைச்
சிந்தையிலுணர்ந்துநன்றாய்த்
தேருமேபலன்சொல்வோர்க்கு
இந்தமாவுலகிலுள்ளோ
யாவரும்வணக்கஞ்சொல்வார்
எந்தையாநந்திபாதம்
இடையறாதேத்திவாழ்வீர். (௪௰)

நந்திநூல்ரோகைசாஸ்திரம்

௱௰

முற்றுப்பெற்றது.

இதனுற்
சகலத்திரா
ட்குந்தெரிய
ப்படுத்துவ
தியாதெனில்



திரிசிரபுரம் இடைத்தெருவில்
வசிக்கும் வை. கந்தசாமிபிள்ளை
சிரேஷ்டபுத்திரரும் திரிகண்
ணீஸ்வரி திருச்சங்கத்
தவரும்
ம-ா-ா-ஸ்ரீ சருகணி



உபாத்தியாயரவர்கள்மாணக்
கருள்ளொருவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ
க. பஞ்சநதம்பிள்ளையவர்களாலியற்றியஸ்ரீ
அகிலாண்டீஸ்வரிசிங்காரஜாவளிப்பதமும்பலகீதரத்நமும்
நட்சத்திரக் கண்ணி இராசிக் கும்மியும் தண்டாயுதபாணி
சங்கீதரசமஞ்சரிஜாவளிப்பதமும்மதுரைசொக்கநாதர்ஜாவளியும்
அச்சிடப்பட்டதுமன்றிஇன்னுமவரதுபாடல்கள்யாவும்அச்சிடப்பிர
சுரபடுவதினல்அப்பாடல்களின்சொற்பொருளணியைவிருப்புற்றசம
ஸ்தரும் திரிசிரபுரம்புஸ்தகக்கடை தி - சபாபதிபிள்ளை யவர்களிடத்தி
ல் சரச விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீரங்கநாயகர் ஜாவளி
ஸ்ரீரங்கநாயகி ஜாவளி
ஸ்ரீரங்கநாயகர்சங்கீதக்கீர்த்தனை
தியாகராஜகீர்த்தனை
தருமபுரிசுப்பராயர்ஜாவளி
பழனியாண்டவர்ஜாவளி
ஷை பிர்மாநந்தஜாவளி
ஷை ஆனந்தஜாவளி
கணேசர்ஜாவளி சரஸ்வதிஜாவளி
சிங்காரஜாவளி
நித்தியாநந்தஜாவளி

இப்படிக்கு
தி. நா. பெரியசாமிபிள்ளை